## இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர்
இணை ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
திருச்செந்தூர்

ந.க.எண். 46331/ 2017/ இசு 2/நாள்.26.09.2017

அய்யா,

பொருள் : கந்த சஷ்டி திருவிழாவிற்கு பக்தர்கள் தங்கும் அறைகள் மற்றும் குடில்கள் ஒதுக்கீடு – நிர்வாக திட்டம் – அங்கீகாரம் வழங்குதல் – சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை W.P.(MD) No.20123/2016 – அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் – திருச்செந்தூர் – தொடர்பாக.

பார்வை : இணை ஆணையர்/ செயல் அலுவலர், நே.மு.க.எண்.5272/ 2016/ ஈ 5/ நாள்.23.08.2017 மற்றும் 15.09.2017

*******

மேற்கண்ட பொருள் தொடர்பாக பார்வையில் கண்டுள்ள அறிக்கையின் தக்கார் தீர்மானத்தின் அடிப்படையிலும் இணை ஆணையர் / செயல் அலுவலரின் பரிந்துரையை பரிசீலித்தும் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் கந்த சஷ்டி விழாவிற்கான விடுதிகள், அறைகள், மற்றும் குடில்கள் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக கீழ்க்கண்ட விபரப்படி நிர்வாகத்திட்டம் அங்கீகரித்து உத்திரவிடப்படுகிறது.

### கந்த சஷ்டி திருவிழா அறைகள் ஒதுக்கீடு செய்வது தொடர்பான நிர்வாகத்திட்டம்

1. கந்த சஷ்டி திருவிழா காலங்களில் திருக்கோயிலில் உள்ள 401 அறைகளில் பாதி நன்கொடை திட்டத்தின் கீழ் பாதி நன்கொடையாளர்களுக்கு 73 அறைகள் ஒதுக்கவேண்டும்.
2. திருவிழாவிற்கு பணிக்கு வரும் அரசு அதிகாரிகளுக்கு 45 அறைகள் ஒதுக்க வேண்டும்.
3. திருக்கோயில் பயன்பாட்டிற்கு 8 அறைகள் ஒதுக்க வேண்டும்
4. திருக்கோயில் பழுதடைந்துள்ள அறைகள் 14 சீர் செய்து பக்தர்களுக்கு ஒதுக்க வேண்டும்
5. கந்த சஷ்டி திருவிழாவிற்கு வருகை தரும் இத்துறை ஆணையர், இத்துறை செயலாளர், உயர்நீதிமன்ற நீதிபதி, மாவட்ட அமைச்சர், இத்துறை அமைச்சர் ஆகியோருக்கு 5 அறைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்
6. மீதம் உள்ள 256 அறைகளில் 119 அறைகள், வாடகை அடிப்படையில் திருக்கோயில் உபயதாரர்களுக்கு ஒதுக்க வேண்டும்

7. மீதமுள்ள 137 அறைகள் கந்த சஷ்டி திருவிழாவிற்கு எந்த வகை அறை வேண்டும் என்பதை குறிப்பிட்டு விண்ணப்பங்கள் முன் வைப்புத் தொகையாக ரூ.4000/—க்கான வங்கி வரைவோலையுடன் கந்த சஷ்டி திருவிழா ஆரம்ப நாளுக்கு 60 நாட்களுக்கு முன்பு இருந்து கந்த சஷ்டி திருவிழா ஆரம்ப நாளுக்கு 15 நாட்களுக்கு முன்பு வரை பெறப்பட வேண்டும்.

8. மேற்படி வைப்புத் தொகை செலுத்தாமல் வரப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு பரிசீலிக்கத் தேவையில்லை.

9. மேற்படி வைப்புத் தொகையாக ரூ.4000/—க்கான வங்கி வரைவோலையுடன் வரப்பெற்ற விண்ணப்பங்கள் திருக்கோயிலில் அலுவலகத்தில் வைத்து திருநெல்வேலி இணை ஆணையர், சரக ஆய்வர், திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர் குழு / தக்கார் ஆகியோர்கள் முன்னிலையில் பொதுமக்கள் பங்கேற்போடு குலுக்கல் முறையில் 137 அறைகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

10. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு அறை மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேல் விண்ணப்பம் விண்ணப்பித்திருப்பது தெரிய வந்தால் அவரது அனைத்து விண்ணப்பங்களும் ரத்து செய்யப்பட வேண்டும்.

11. ஒதுக்கீடு செய்யும் பணியானது விண்ணப்பதாரரின் வரிசையாக எண்ணிடப்பட்டு வரிசைப்படுத்தப்பட வேண்டும். இதற்காக தனி பதிவேடு பேணப்பட வேண்டும்.

12. குலுக்கல் நடைபெறும் முன்பாக தகுதியான விண்ணப்பதாரர்களின் முழு முகவரி மற்றும் வரிசை எண்ணுடன் கூடிய அறிவிப்பானது திருக்கோயில் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

13. அதனை தொடர்ந்து வரிசை எண் மட்டும் கொண்ட சீட்டில் மடித்து வைத்து குலுக்கல் நடத்தப்பட வேண்டும்.

14. குலுக்கல் சீட்டின் எண் அதற்காக பேணப்படும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். குலுக்கல் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களின் பெயர், முழு முகவரி மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட அறை எண் விபரம், வாடகை விபரம் ஆகியவை அலுவலக அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட வேண்டும் மற்றும் திருக்கோயில் வலைதளத்திலும் பதிவேற்றம் செய்யவேண்டும்.

15. மேற்படி நடவடிக்கைகளை திருக்கோயில் நிர்வாகம் உரிய காவல்துறை பாதுகாப்புடன் சந்தேகத்திற்கு இடமின்றி நடத்திட வேண்டும்

16. அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு பதிவுத் தபால் மூலம் கந்த சஷ்டித்திருவிழாவின் ஆரம்ப நாளுக்கு 7 நாட்களுக்கு முன்பு தகவல் தெரிவிக்க வேண்டும்.

17. தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்பதாரர்களின் வங்கி வரைவோலையை நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் திரும்ப வழங்க வேண்டும்.

18. குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் திருக்கோயில் நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் அறையை எவ்வித ஆட்சேபனையும் இன்றிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

19. திருக்கோயில் நிர்வாகத்தால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அறைகளை பயன்படுத்தத்தவறும் நபர்களின் அறை ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதுடன் அவரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு திருக்கோயில் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

20. அறைகள் ஒதுக்கீடு பெற்றவர்கள் அறைக்கு வராத சூழ்நிலையில் திருக்கோயில் நிர்வாகம் அதனை பயன்பாட்டிற்கு விடுவது தொடர்பாக உரிய முடிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

21. மேற்படி நிர்வாகதிட்ட நடைமுறையினை இனி வரும் காலங்களில் பின்பற்ற வேண்டும் இதில் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தால் ஆணையரின் முன் அனுமதி பெற்று மாற்றங்கள் செய்து கொள்ள வேண்டும்.

27/9

கூடுதல் ஆணையர் (பொது)
ஆணையருக்காக

27.9.17

நகல்
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
திருநெல்வேலி

/ மிகை